பத்திரிக்கை செய்தி

பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை விடுவிப்பதற்காக லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய தற்காலிக பணியாளருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

புகார்தாரர் திரு.கதிரேசன், மதுரை மாவட்டம் அவர்கள் தன்னுடைய மருமகளின் பெயரில் ஆவணம் பதிவு செய்தார். பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் வழிகாட்டி மதிப்பை நிர்ணயம் செய்ய வேண்டி சிறப்பு ஆட்சியர் (முத்திரைதாள்) மதுரை மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.ரஹ்மான் என்ற கலீல் உல் ரஹ்மான், தற்காலிக பணியாளர், சிறப்பு ஆட்சியர் (முத்திரைதாள்) அலுவலகம், மதுரை மாவட்டம், அவர்கள் தனக்கு ரூ.40,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, மதுரை பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 2015ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு திரு.ரஹ்மான் என்ற கலீல் உல் ரஹ்மான், தற்காலிக பணியாளர், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.40,000/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், மதுரை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் 25.09.2025 ரஹ்மான் என்ற கலீல் உல் ரஹ்மானுக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் ரூ.4,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.